RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 260 | செப்டம்பர் 24, 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# 2026 - 27 எல்-நினோ: கனமழை, வெள்ளம், கடும் வெப்பத்தை எதிர்கொள்ள தமிழக அரசுக்கு நிபுணர் குழு பரிந்துரைகள்

சென்னை: செப்.24-

2026-27ஆம் ஆண்டில் ஏற்படக்கூடிய எல்-நினோ தாக்கத்தை எதிர்கொள்ள தமிழக அரசு அமைத்த நிபுணர் ஆலோசனைக் குழுவானது முதற்கட்ட பரிந்துரைகளை வெளியாகியுள்ளன.

அதில், வடகிழக்கு பருவமழையின்போது கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்பிருப்பதாகவும், அதனைத் தொடர்ந்து 2027 கோடைகாலத்தில் கடும் வெப்பம் மற்றும் சில பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவித்துள்ள நிபுணர் குழு, இந்த சூழ்நிலைகளை சமாளிக்க முன்கூட்டியே நடவடிக்கை எடுக்க வேண்டுமென பரிந்துரைத்துள்ளது.

**அதிகரித்த வெப்பத்தால் அதீத மழைக்கு வாய்ப்பு**

2026 ஆகஸ்ட் மாத நிலவரப்படி, மத்திய மற்றும் கிழக்கு பூமத்திய ரேகைப் பசிபிக் பெருங்கடல் பகுதியில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை இயல்பைவிட 2.20 டிகிரி செல்சியஸ் அதிகரித்துள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் வலுவான எல்-நினோ நிலை காணப்படுவதாகவும், இந்த நிலை 2026ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மேலும் வலுவடைந்து 2027ஆம் ஆண்டின் தொடக்கம் வரை நீடிக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, 2026 அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்தியாவின் சில பகுதிகளில் இயல்பைவிட அதிக மழைப்பொழிவு இருக்க வாய்ப்புள்ளதாக ECMWF பருவகால முன்னறிவிப்பு தெரிவிக்கிறது. சில பகுதிகளில் இயல்பைவிட 50 முதல் 200 மில்லி மீட்டர் வரை கூடுதல் மழைப்பொழிவு ஏற்படக்கூடும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

எல்-நினோ காரணமாக வறட்சி மட்டுமே ஏற்படும் என்ற கருத்து சரியானதல்ல என்றும், கடந்த கால அனுபவங்கள் இதனை காட்டுவதாகவும் நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

**தமிழ்நாட்டில் ஏற்பட்ட முந்தைய தாக்கங்கள்**

1997ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழை இயல்பைவிட 52 சதவீதம் அதிகமாக இருந்தது. 2005ஆம் ஆண்டு 79 சதவீதம் கூடுதல் மழைப்பொழிவுடன் தொடர் புயல்கள் ஏற்பட்டதால் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. 2015ஆம் ஆண்டு கனமழையால் சென்னையில் பெருவெள்ளம் ஏற்பட்டது.

2023-24ஆம் ஆண்டில் மிக்ஜாம் புயல் மற்றும் தென் மாவட்டங்களில் பெய்த அதிதீவிர கனமழையால் பாதிப்புகள் ஏற்பட்டன. காயல்பட்டினத்தில் 95 செ.மீ. மழைப்பொழிவு பதிவானது. 2024ஆம் ஆண்டு ஃபெஞ்சல் புயலால் விழுப்புரம் உள்ளிட்ட கடலோர மற்றும் உள் மாவட்டங்களில் வெள்ளப் பாதிப்புகள் ஏற்பட்டன.

அதேநேரத்தில், 2015ஆம் ஆண்டின் பெருவெள்ளத்துக்குப் பிறகு 2016ஆம் ஆண்டில் 62 சதவீதம் மழைப்பற்றாக்குறை ஏற்பட்டது. மேலும், 2024ஆம் ஆண்டு கோடைக்காலத்தில் தமிழகத்தின் பல மாவட்டங்களில் வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸுக்கும் அதிகமாக பதிவானது ஆகியவையும் நிபுணர் குழுவால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, எல்-நினோ காலகட்டத்தில் வெள்ளம் மற்றும் வறட்சி என இரு வகையான சூழல்களையும் எதிர்கொள்ளும் வகையில் தமிழ்நாட்டை தயார்படுத்த வேண்டும் என பரிந்துரைத்துள்ளது.



**பருவமழைக்கு மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்**

2026 வடகிழக்குப் பருவமழைக்கு முன்பாக என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென நிபுணர் குழு பரிந்துரைத்திருக்கிறது. அதன்படி,

ஆறுகள், கால்வாய்கள் மற்றும் மழைநீர் வடிகால்களிலுள்ள வண்டல் மற்றும் அடைப்புகளை அகற்றி அவற்றை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

மதகுகள், அணைகள் மற்றும் நீர்நிலைகளின் கரைகளை ஆய்வு செய்து அவசர சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

தாழ்வான பகுதிகளில் மோட்டார் பம்புகள், மாடுலர் தடுப்புகள் மற்றும் எச்சரிக்கை சைரன்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

வடிகால் அடைப்புகளை அகற்ற நவீன மற்றும் ரோபோடிக் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும்.

வெள்ள நிலவரங்களை நிகழ்நேரத்தில் கண்காணிக்க ட்ரோன்கள் மற்றும் IoT சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும்.

பொதுமக்களுக்கு தமிழில் எச்சரிக்கை தகவல்களை வழங்கும் பன்முகப் பேரிடர் கண்காணிப்பு மற்றும் முன்நடவடிக்கை அமைப்பை உருவாக்க வேண்டும்.

தேடுதல், மீட்பு மற்றும் சேத மதிப்பீட்டுப் பணிகளில் ட்ரோன்களைப் பயன்படுத்த வேண்டும்.

கிராமப்புற தன்னார்வலர்கள் மற்றும் சுய உதவிக்குழுக்கள் மூலம் இறுதிக்கட்ட பேரிடர் தயார்நிலையை வலுப்படுத்த வேண்டும்.

**2027 கோடைகாலத்தை சமாளிக்க மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்**

2027 கோடைக்காலத்தில் கடும் வெப்பம் மற்றும் குடிநீர் பற்றாக்குறை ஏற்படக்கூடிய சூழலை எதிர்கொள்ள முன்கூட்டியே நீர் ஒதுக்கீட்டுத் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும்.

நிலத்தடி நீர் மற்றும் நீர்த்தேக்கங்களின் நிலவரத்தை IoT தொழில்நுட்பம் மூலம் கண்காணிக்க வேண்டும்.

கோடைக்கால பாசனத்துக்கான நீர் ஒதுக்கீட்டுத் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும்.

வறண்ட காலத்தைப் பயன்படுத்தி நீர்த்தேக்கங்களைத் தூர்வாருதல், நகர்ப்புறங்களில் குடிநீர் தணிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் கழிவுநீரை மறுபயன்படுத்துவதை ஊக்குவித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

மேற்கூறியவாறு, வெள்ளம் மற்றும் வறட்சி ஆகிய இரு சூழல்களையும் கருத்தில் கொண்டு விவசாயத்துறையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

**விவசாயம், போக்குவரத்து, மருத்துவம் உள்ளிட்ட பிற துறைகளில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

பருவமழைக்குத் தேவையான விதைகள் போதுமான அளவில் கிடைப்பதை உறுதி செய்வதுடன், பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தை (PMFBY) விவசாயிகளிடம் ஊக்குவிக்க வேண்டும்.

2027 கோடைக்காலத்தை எதிர்கொள்ள வறட்சி மற்றும் வெப்பத்தைத் தாங்கக்கூடிய குறுகிய காலப் பயிர் ரகங்களை ஊக்குவிப்பதுடன், சொட்டுநீர்ப் பாசனத்தை அதிகரிக்க வேண்டும்.

வெள்ள அபாயம் உள்ள துணை மின் நிலையங்களை ஆய்வு செய்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மெட்ரோ ரயில் உள்ளிட்ட முக்கிய பொதுப் போக்குவரத்து மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கு வெள்ளத்தின் போதும் தடையின்றி மின்சாரம் கிடைக்கும் வகையில் மாற்று மின்சார வசதிகளை உறுதி செய்ய வேண்டும்.

மழைக்காலத்தில் டெங்கு, மலேரியா, லெப்டோஸ்பைரோசிஸ் உள்ளிட்ட நோய்கள் பரவுவதைத் தடுக்க கண்காணிப்பைத் தீவிரப்படுத்த வேண்டும்.

மருத்துவமனைகளில் தேவையான மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருட்களை போதுமான அளவில் இருப்பில் வைத்திருப்பதோடு, பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை உறுதி செய்வது அவசியம்.

**பள்ளிகளுக்கான நடவடிக்கைகள்**

2027 கோடைக்காலத்தில் வெப்பநிலைக்கு ஏற்ப பள்ளிகளின் வேலை நேரத்தை மாற்றியமைக்க வேண்டும்.

பருவகாலத்திற்கு ஏற்ற தளர்வான சீருடைகளை அனுமதித்தல், அதிக வெப்பம் நிலவும் நேரங்களில் வெளிப்புற விளையாட்டுப் பயிற்சிகளை கட்டுப்படுத்த வேண்டும்.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் உள்ளிட்ட பொதுக் கட்டடங்களில் வெப்பத்தின் தாக்கத்தைக் குறைக்க குளிர் கூரை மற்றும் வெப்பத்தைப் பிரதிபலிக்கும் பூச்சுகளைப் பயன்படுத்த வேண்டும்.

**மீனவர்களுக்கான நடவடிக்கைகள்**

கடல் நிலவரம் தொடர்பான INCOIS எச்சரிக்கைகளை தமிழில் மீனவர்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டும்.

புயல் அல்லது வெள்ளம் ஏற்படுவதற்கு முன்பாக படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**கால்நடைகள் பாதுகாப்பு**

கால்நடைகளுக்கு வெள்ளப்பருவத்திற்கு முன்பாக தடுப்பூசி செலுத்துதல், போதுமான தீவனம் மற்றும் மருந்துகளை பாதுகாப்பான உலர்ந்த இடங்களில் சேமித்து வைத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வானிலை கண்காணிப்பு நடவடிக்கைகள்**

பேரிடர் அபாயம் அதிகமுள்ள மாவட்டங்களுக்கு அடுத்த 3 முதல் 5 ஆண்டுகளில் ‘டிஜிட்டல் இரட்டைகள்’ (Digital Twins) உருவாக்கி, வெள்ளம் உள்ளிட்ட பேரிடர் சூழ்நிலைகளை முன்கூட்டியே உருவகப்படுத்தி ஆய்வு செய்ய வேண்டும்.

செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான பேரிடர் இழப்பு மதிப்பீட்டுத் தளங்களை உருவாக்குதல், தரவு மையங்களை அமைத்தல், சமூக ஊடகங்களில் பரவும் தவறான தகவல்களை கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

சதுப்பு நிலங்கள் மற்றும் ஈர நிலங்களை மீட்டெடுத்து இயற்கை சார்ந்த வெள்ள மேலாண்மை முறைகளை வலுப்படுத்த வேண்டும்.

வானிலை நிலவரங்களை அடிப்படையாகக் கொண்டு விரைவாக இழப்பீடு வழங்கும் ‘அளபுரு சார்ந்த காப்பீடு’ (Parametric Insurance) முறையை விவசாயிகள் மற்றும் பேரிடரால் பாதிக்கப்படும் மக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.

இதையும் படிங்க: கட்டட கழிவுகளில் இருந்து எழும் புதிய கட்டடங்கள்: அசத்தும் சிஎஸ்ஐஆர்

மேற்கூறிய நிபுணர் குழுவின் முதற்கட்ட பரிந்துரைகள்படி நடவடிக்கைகளை மேற்கொள்ள அந்தந்த அரசு துறைகளுக்கு இவை அனுப்பப்பட உள்ளன. எல்-நினோ மற்றும் அதனால் ஏற்படக்கூடிய வானிலை மாற்றங்களைத் தொடர்ந்து கண்காணித்து, தேவைக்கேற்ப கூடுதல் வழிகாட்டுதல்களை குழு வழங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேட்டூர் அணை திறந்தும் பலனில்லை ஏரிகள், குளங்கள் வறண்டு கிடக்கின்றன : பருவமழை கைகொடுக்குமா? விவசாயிகள் எதிர்பார்ப்பு

வலங்கைமான். செப்.24-

மேட்டூர் அணை திறந்தும் உரிய தண்ணீர் கிடைககததால்ஏரிகள், குளங்கள் வறண்டு கிடக்கின்றனபருவமழை கைகொடுக்குமா என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். டெல்டா மாவட்டங்களில் பாசனத்திற்கு மேட்டூர் அணைதிறக்கப்பட்டு 20 நாட்களை கடந்த நிலையில் பாசன ஆறுகள் தண்ணீர் இன்றி வறண்டுகிடப்பதுடன் நீர்நிலைகள் வடகிழக்கு பருவமழையை எதிர்நோக்கி காத்திருக்கின்றன.

டெல்டா மாவட்ட ங்களில் பாசனத்திற்கு மேட்டூர் அணை ஆண்டுதோறும் ஜூன் 12ம் தேதி திறக்கப்படுவது வழக்கம். தற்போதைய அரசு கர்நாடகாவிடம் இருந்து உரிய நீரை கேட்டு பெறாததால் டெல்டா மாவட்டங்களை பாசனத்திற்கு மேட்டூர் அணை திறக்கப்படுவதில் காலதாமதம் ஏற்பட்டது.

டெல்டா மாவட்ட ங்களில் பாசனத்திற்கு மேட்டூர் அணை



திறக்கப்படுவது விவசாயிகளைச் சார்ந்த பிரச்சனை என தமிழக அரசு தற்போது எண்ணுகிறது. ஆற்று நீரை நம்பி சாகுபடியை செய்ய இயலாமல் காத்திருக்கின்ற உழவர்களுக்கு மாற்று ஏற்பாடு என்ன என்பதை அரசு தெளிவுபடுத்தவேண்டும். கடந்த ஆண்டுகள் ஆண்டுகளில் குறுவை சாகுபடி அதிகளவில் மேற்கொளளப்பட்டு கால்நடைகளுக்கு வைக்கோல்தீவனமும் அதிகம் உற்பத்தியானது.

இந்த ஆண்டு குறுவை சாகுபடி குறைவதால் வைக்கோல் தீவனம் பற்றாக்குறை ஏற்படும் பொழுது கால்நடை வளர்க்கின்ற மிகச் சிறிய விவசாயிகளுக்கு வைக்கோல் கிடைப்பதற்கான உத்தரவாதத்தை தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டும்.

குளம், குட்டைகள் ஏரிகளில் தண்ணீர் நிரப்புவதற்கு வாய்ப்பு இல்லாததால் உள்நாட்டு மீன் வளர்க்கும் உழவர்கள் வாழ்வாதாரம் இழந்து நிற்கின்றனர். குளம், குட்டை, ஏரிகளில் தண்ணீர் இல்லாததால் நிலத்தடி தண்ணீர் மிகவும் கீழே சென்றுவிட்டது அதனால் பல்லுயிர் பெருக்கமும் குறைந்துவிட்டது.இதுகுறித்தும் தமிழக அரசு சிந்திக்கவில்லை.

கடந்த ஆண்டு களைவிட சுமார் 2 லட்சம் ஏக்கர் சாகுபடி பரப்பளவு சுருங்கி விடுகின்ற காரணத்தினால் ஏற்படுகின்ற பொருளாதார இழப்பு விவசாயக் கூலி தொழிலாளிகளின் வாழ்வாதார இழப்பு குறித்து அரசு உரிய நிலைப்பாட்டினை அறிவிக்கவில்லை என முன்னதாக பல்வேறு உழவர் அமைப்பினர் கூறிவருகின்றனர்.

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் தாலுகாவில் உள்ள 71 கிராமங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட கோயில்களுக்கு சொந்தமான குளங்க ள்உ ள்ளன. அதுபோன்று கிராம ஊராட்சிகளுக்கு சொந்தமான குளங்கள் என 75க்கும் மேற்பட்ட குளங்கள் நீர்நிலையின்றி கிடக்கின்றன.

மேட்டூர் அணை நீர் திறப்பு காலதாமதமாக கடந்த ஒன்றாம் தேதி திறக்கப்பட்டது. மேட்டூர் அணை டெல்டா மாவ ட்டங்களில் பாசனத்திற்கு திறக்கப்பட்டு 15 தினங்களுக்குப் பிறகு குடமுருட்டி உள்ளிட்ட முக்கிய பாசன ஆறுகளில் தண்ணீர்வந்தது.பாசன ஆறுகளில் போதிய தண்ணீர் வராதது பாசன வாய்க்கால்களில் தண்ணீர் திறக்காதது போன்ற காரணத்தால் டெல்டா மாவட்டங்களில் குளம் உள்ளிட்ட நீர்நிலைகள் வடகிழக்கு பருவமழைக்காக காத்து கிடக்கின்றன.

## கடலூரில் மாநகராட்சி ஆணையரை கண்டித்து திமுக கவுன்சிலர்கள் முற்றுகை போராட்டம்

கடலூர். செப்.24-

கடலூர் மாநகராட்சியில் சுமார் 45 வார்டுகளில் மழைநீர் வாய்க்கால்களில் தூர் வாரும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர். அந்த தூர்வாரும் பணி முறையாக நடக்கவில்லை என புகார் தெரிவித்து கடலூர் மாநகராட்சி திமுக கவுன்சிலர்கள் மேயர் சுந்தரிராஜா தலைமையில் கடலூர் மாநகராட்சி ஆணையரிடம் புகார் தெரிவிக்க சென்றனர்.

இந்நிலையில் மாநகராட்சி



ஆணையர் முறையாக பதில் அளிக்காமல் தரக்குறைவாக பேசியதாக கூறப்படுகிறது மேலும் கடலூர் மாநகராட்சி மேயரையும் மரியாதை குறைவாக நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடலூர் மாநகராட்சி திமுக கவுன்சிலர்கள் தற்போது மாநகராட்சி அலுவலகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் கடலூர் மாநகராட்சி நுழைவாயில் முன்பு கடலூர் உட்கோட்ட டிஎஸ்பி தமிழ் இனியன் தலைமையில் 100 க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## ‘மறுவாழ்வுக்கு வழிகாட்டும் உடலுறுப்புக் கொடையாளர்கள்’ - முதல்வர் விஜய் பெருமிதம்

சென்னை: செப்.24-

‘மனிதநேயச் சுடரை ஏந்தி, உயிர்களின் மறுவாழ்வுக்கு வழிகாட்டும் உடலுறுப்புக் கொடையாளர்களை பெருமையுடன் நினைவுகூர்வோம்’ என முதல்வர் விஜய் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘உடலுறுப்பு தானம் குறித்த முக்கியத்துவத்தை மக்களிடையே ஏற்படுத்தும் வகையிலும், சிறுவன் ஹிதேந்திரனின் உடலுறுப்புகளை



தானமாக வழங்கியதை நினைவுகூரும் வகையிலும் ஆண்டுதோறும் செப்டம்பர் 23-ஆம் நாள் தமிழ்நாடு உடலுறுப்பு தான நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

உடலுறுப்பு தானம் என்பது, ஒருவர் மறைந்த பின்னரும் அவரது உறுப்புகள் மூலம் பலருக்கு மறுவாழ்வு அளிக்கும் மகத்தான மனிதநேயச் செயலாகும். உறுப்பு மாற்று சிகிச்சைக்காகக் காத்திருக்கும் பலருக்குத் தானமாக வழங்கப்படும் ஒவ்வொரு உறுப்பும் புதிய நம்பிக்கையையும், புதிய வாழ்வையும் அளிக்கிறது.

மனிதநேயச் சுடரை ஏந்தி, உயிர்களின் மறுவாழ்வுக்கு வழிகாட்டும் உடலுறுப்புக் கொடையாளர்கள் அனைவரையும் இந்நாளில் பெருமையுடன் நினைவுகூர்வோம்’ எனத் தெரிவித்துள்ளார்.

## மது பாட்டில்களுக்கு சுற்றுச்சூழல், சமூக நல வரி

### மதுபானங்களின் விலை உயர வாய்ப்பு

சென்னை, செப்.24-

மது பாட்டில் களுக்கு கூடுதலாக சுற்றுச்சூழல் மற்றும் சமூக நல வரியும் விதிக்கப்படவுள்ளது. தமிழ் நாடு மதிப்பு கூட்டப்பட்ட வரி சட்டத்தின் கீழ் சுற்றுச் சூழல் மற்றும் சமூக நல வரி விதித்து தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஒவ்வொரு மது பாட்டிலுக்கும் அதன் அளவு மற்றும் பாட்டில் தயாரிக்கப் படும் பொருட்ளுக்கு ஏற்ப வரி விதக்கவும், அதிகபட்சமாக ரூ.20 வரை விதிக்கலாம் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த வரி வருவாயை மதுபாட்டில்களை மறுசுழற்சி செய்ய அல்லது பாதுகாப்பாக அகற்றும் பணிகளுக்கும் மது பழக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்கும் அவர்களின் குடும்பங் களுக்கு நிவாரணம் வழங்கவும், மதுவின் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், சுற்றுச் சூழல், வனம் மற்றும் வன உயிரினங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும் அரசு பயன்படுத்தும்.

மேலும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக நலன் சார்ந்த பணிகளுக்கும் பயன்படுத்தப்படும் என அரசிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் தவெக அரசு பொறுப்பேற்றது முதல் மது பான உற்பத்தியாளர்கள் டாஸ்மாக் கடைகளுக்கு வழங்கும் ஒவ்வொரு மது பான பெட்டிக்கும் கூடுதலாக ரூ.90 கட்டணம் பெறப்படுகிறது.

மேலும் மூலப்பொருட்களின் விலை மற்றும் உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதால் மது பானங்களின் விலை உயர்த்த வேண்டும் என உற்பத்தியாளர்கள் கோரிக்கை வைத்தனர்.

டாஸ்மாக் நிர்வாகமும் இதுகுறித்து ஆலோசனைகளை மேற்கொண்டிருந்த நிலையில், தற்போது கூடுதலாக ரூ.20 வரை சுற்றுச்சூழல் மற்றும் சமூக நல வரி விதிக்கப்பட்டுள்ளதால் மதுபானங்கள் விலை உயர வாய்ப்புள்ளது.




# திருவள்ளூரில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான காலை உணவு திட்டத்தை எம்.எல்.ஏ. அருண் தொடங்கி வைத்தார்

திருவள்ளூர், செப்.24-

தமிழ்நாட்டில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தின் விரிவாக்கம் இன்று தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் சென்னை திருவான்மியூரில் உள்ள காந்தி கிராமம் நடுநிலைப்பள்ளியில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தைத் தொடங்கி வைத்தார்.

அதனை தொடர்ந்து திருவள்ளூரில் அமைந்துள்ள ஆர்.எம். ஜெயின் அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு காலை உணவு திட்டத்தை திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் அருண்குமார்,தொடங்கி வைத்து மாணவர்களுக்கு உணவு பரிமாறி, அவர்களுடன் அமர்ந்து உணவருந்தினார்.

மேலும் இத்திட்டத்தின் வாயிலாக திருவள்ளூர் நகராட்சியில் உள்ள 15 பள்ளியில் பயிலும் 6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரையிலான 2170 மாணவ மாணவிகள் காலை உணவு திட்டத்தால் முலம் பயன் பெற்றனர், தமிழக முதல்வர் ஜேசப்விஜய்க்கு பள்ளி மாணவிகள் நன்றி தெரிவித்தனர்.



# தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு

கிருஷ்ணகிரி, செப்.24-

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை வட்டம், தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது “தாய்மாமன் தங்க மோதிரம்” திட்டத்தின் முன்னேற்பாடு பணிகள் மற்றும் மருத்துவமனையில் செயல்பட்டு வரும் தீவிர காய்ச்சல் தடுப்பு சிறப்பு பிரிவு ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும், காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள், நோயாளிகளுக்கு வழங்கப்படும் மருத்துவச் சேவைகள், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் சுகாதாரப் பணிகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். பருவமழைக் காலத்தை முன்னிட்டு காய்ச்சல் மற்றும் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கும் வகையில் தேவையான நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு சுகாதாரத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.




■ கிருஷ்ணகிரி மாவட்டம் கெலமங்கலம் அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் டெங்கு தடுப்பு மற்றும் நோய் பரவலை கட்டுப்படுத்தும் 2 வார கால தூய்மைப் பணியை மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் தொடங்கி வைத்தார். உடன் கல்லூரி முதல்வர் கோவிந்தராஜு, சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் ஜெகநாதன் ஆகியோர் பங்கேற்றனர். வட்டார மருத்துவ அலுவலர் ராஜேஷ், வட்டாட்சியர் சண்முகம் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜேஷ், குமரேசன், துணை வட்டாட்சியர் சக்திவேல் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் சூரிய ஒளி மின் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த மாவட்ட அளவிலான குழுக் கூட்டம்



தேனி செப்,24-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் சூரிய ஒளி மின் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த மாவட்ட அளவிலான குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது.

தேனி மாவட்டத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டை அதிகரிக்கும் நோக்கில், நகர்ப்புற மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் இத்திட்டத்தைப் பரவலாக்க, பெரிய அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் புதிதாக விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் மற்றும் நகராட்சி நிர்வாகம் இணைந்து முதற்கட்டமாக சிறப்புப் பதிவு முகாம்களை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் ஒரே இடத்தில் பல மின் பயனீட்டாளர்கள் இத்திட்டத்திற்கு எளிதாக விண்ணப்பித்துபயன்பெற முடியும்.இத்திட்டத்தின்கீழ், 3 கிலோ வாட் (3 KW) வரையிலான வீட்டு உபயோக சூரியசக்தி கட்டமைப்புகளுக்கு மத்திய அரசின் சார்பில் அதிகபட்சமாக ரூ.78,000/- வரை மானியம் வழங்கப்படுகிறது. மேலும், இத்துடன், மாநில அரசின் கூடுதல் மானியமாக ரூ,22,000/- வரை வழங்கப்படுகிறது. இதன்மூலம் பொதுமக்கள் மிகக் குறைந்த முதலீட்டில் இத்திட்டத்தைப் பெற முடியும். எஞ்சிய தொகைக்கு வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் கடன் வசதி பெற்றுத்தரவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது ஆகையால், பொதுமக்கள் இந்த பசுமை ஆற்றல் திட்டத்தைப் பயன்படுத்தி, தங்களின் மின்சாரக் கட்டணத்தைக் குறைத்துக் கொள்வதோடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் பங்களிக்கலாம். இத்திட்டம் குறித்த கூடுதல் விவரங்களுக்கு பொதுமக்கள் தங்கள் பகுதிகளிலுள்ள மின்வாரிய அலுவலகங்களை அணுகலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, சூரிய ஒளி மின் கட்டமைப்பு (Rooftop Solar) மற்றும் நெட்-மீட்டரிங் (Net Metering) வசதிகளை விரைவுபடுத்துவது குறித்து தொழில்நுட்ப விளக்கம் அளிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) .துஷார் ஸ்ரீஹர் ஷிண்டே, ., மேற்பார்வைப் பொறியாளர் (மின்சாரத்துறை) .நடராஜன், உதவி செயற்பொறியாளர்கள். முருகேசன், .உமாகாந்த் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சூரியசக்தி உபகரண விற்பனையாளர்கள், வங்கியாளர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் ஸ்ரீவில்லிப்புத்தூர் மேகமலை புலிகள் காப்பகம் (மேகமலை கோட்டம்) மற்றும் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி (நபார்டு) இணைந்து நடத்திய நொச்சியோடை பழங்குடியின குடியிருப்புகளுக்கான மாதிரி சூரிய ஆற்றல் பழங்குடியினர் கிராமத் திட்ட தொடக்க விழாவில் பழங்குடியினர் உற்பத்தியாளர் நிறுவனம் (FPO) சார்பில் உருவாக்கம் மற்றும் மேம்பாட்டிற்கான ரூ.27.30 இலட்சம் மதிப்பிலான ஒப்புதல் ஆணையினை, அந்நிறுவனத்தின் இயக்குநர் குழு உறுப்பினர்களிடம் (BoDs) மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், வழங்கினார்.



# புதுஆயக்குடியில் தவெக வர்த்தக அணி சார்பில் 100 நாள் சாதனை விளக்க பொதுக்கூட்டம்

## மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல்

திண்டுக்கல். செப்.24-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே புதுஆயக்குடியில் தமிழக வெற்றிக் கழகத்தின் வர்த்தக அணி சார்பில் மாபெரும் சாதனை விளக்க பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

திண்டுக்கல் மேற்கு மாவட்ட வர்த்தக அணி இணை அமைப்பாளர் தக்வா முகமது இஸ்மாயில் சேட், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் இக்பால்தீன், இணை அமைப்பாளர் மயூரா முருகன் ஆகியோர் இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக திண்டுக்கல் மேற்கு மாவட்ட தவெக செயலாளர் கார்த்திக் ராஜா கலந்து கொண்டு, கட்சியின் 100 நாள் செயல்பாடுகள் மற்றும் மக்கள் பணிகள் குறித்து விளக்கி பேசினார்.

மேலும் தலைவர் விஜய் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஏழை எளிய மாணவ, மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் பழனி பாலன், நாகராஜ், சிவா, தொப்பம்பட்டி ராஜ்குமார், ஜின்னா, முத்துப்பாண்டி, மாரி, சரவணன் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

தவெக-வின் இந்த மக்கள் பணி புதுஆயக்குடி பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.



■ மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் மதசார்பற்ற சமூகநீதி கூட்டணி சார்பில் தமிழக வெற்றிக் கழகம் கட்சி விசில் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் மரகதம் குமரவேல் அவரை ஆதரித்து பொதுச் செயலாளர் புஸ்லீஆனந்த் கருங்குழி பகுதியில் பொதுமக்களிடையே தீவிர வாக்கு சேகரித்தார்,கருங்குழி கொடி கார்த்திக் மிக பிரம்மாண்ட வரவேற்பு அளித்தார்,

# சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தி மழலையர் பள்ளி குழந்தைகள் விழிப்புணர்வு நடைபேரணி

பம்மல் செப்,24-

செங்கல்பட்டு மாவட்டம் பொழிச்சலூர் சுற்றுச்சூழலை பாதுகாப்பதன் அவசியம், தூய்மை மற்றும் சுகாதாரம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், மழலையர் பள்ளி குழந்தைகள் பங்கேற்ற விழிப்புணர்வு நடைபேரணி நடைபெற்றது.

பொழிச்சலூர் ராமலிங்கம் நகர் பகுதியில் செயல்பட்டு வரும் கிளமன்ட்ஸ் ஃபிரி ஸ்கூல் சார்பில் நடைபெற்ற இந்த நடைபேரணியில் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். குழந்தைகள் ஆர்வத்துடன் நடைபேரணியில் பங்கேற்று, சுற்றுப்புறத்தை தூய்மையாக பராமரிக்க வேண்டும், குப்பைகளை முறையாக அகற்ற வேண்டும், சுகாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என்பதன் அவசியம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.







பள்ளி நிறுவனர் மற்றும் முதல்வர் கேரளின் கிளமண்ட் தலைமையில் நடைபெற்ற நடைபேரணியை பொழிச்சலூர் ஊராட்சி மன்ற தலைவர் வனஜா கொடியசைத்து தொடங்கி வைத்தார். தொடர்ந்து மரக்கன்றுகள் நடப்பட்டதுடன், நடைபேரணியில் பங்கேற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நடைபேரணியின் போது, ராமலிங்கம் நகர் பகுதியில் உள்ள கால்வாய்கள் மற்றும் சுற்றுப்புறங்களில் தேங்கியுள்ள குப்பைகள் மற்றும் கழிவுநீரை முறையாக அகற்றி, சுகாதாரமான சூழலை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

குறிப்பாக, பள்ளிக்கு தினமும் வந்து செல்லும் மழலையர் பள்ளி குழந்தைகளின் பாதுகாப்பையும், அவர்களின் சுகாதாரத்தையும் கருத்தில் கொண்டு, பள்ளியைச் சுற்றியுள்ள பகுதிகளை தூய்மையாகவும் சுகாதாரமாகவும் பராமரிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

குழந்தைகள் முதல் பெற்றோர்கள், ஆசிரியர்கள் வரை அனைவரும் ஒன்றிணைந்து பங்கேற்ற இந்த விழிப்புணர்வு நடைபேரணி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சுற்றுப்புறத் தூய்மை குறித்த பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைந்தது.

# நீலகிரி மாவட்டத்தில், மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் ரூ.1.69 கோடி மானியம் பெற்று பயனடைந்த 59 எண்ணிக்கையிலான புதிய தொழில் முனைவோர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்கள், அனைத்து துறைகளின் வாயிலாக பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை அறிவித்து, சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடைக்கோடி தமிழரின் கனவுகளை தாங்கி அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற இலட்சியத்திற்கிணங்க, படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களை தொழில் தொடங்க வைத்து, தொழில் முனைவோர்களாக உருவாக்கிடும் பொருட்டு எண்ணற்ற திட்டங்களை தீட்டி சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் செயல்பட்டு வரும் மாவட்ட தொழில் மையத்தின் சார்பில், படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் சுய தொழில் தொடங்கி பயன்பெறும் வகையில், புதிய தொழில் முனைவோரை கண்டறிந்து, அவர்களை ஆற்றல் மிக்க தொழில் முனைவோர்களாக உருவாக்கிட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், அவர்களுக்கு தொழில் மேம்பாட்டு பயிற்சி மற்றும் மானியத்துடன் கூடிய கடனுதவிகள் அளித்து, பல்வேறு திட்டங்களின் கீழ் பயன்பெற செய்து வருகிறார்கள்.

மேலும், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத்திட்டம், வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம், குறு,சிறு கொள்கை திட்டங்கள் போன்ற திட்டங்களின் மூலம் பயன்பெறுவதற்கு விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பித்தும், தொழில் நிறுவனங்கள் விரிவாக்கத்திற்கும், தொழில் நிறுவனங்களுக்கான அரசு வழங்கும் அனைத்து மானியங்களை பெற்று பயன்பெறுவதற்கும் மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில், நீலகிரி மாவட்டத்தில் மாவட்ட தொழில் மையத்தின் மூலம் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (NEEFD) 2026-2027 ஆம் ஆண்டில் 3 பயனாளிகளுக்கு ரூ.8.01 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. வேலையில்லா இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ்(UYEGP)



2026-2027 ஆம் ஆண்டில் 9 பயனாளிகளுக்கு ரூ.5.93 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ்(AABCS) 2026-2027 ஆம் ஆண்டில் 41 பயனாளிகளுக்கு ரூ.150.79 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (TWEES) 2026-2027 ஆம் ஆண்டில் 6 பயனாளிகளுக்கு ரூ.4.62 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் 4 சுய வேலை வாய்ப்பு திட்டங்கள் மூலமாக 2026-2027 ஆம் ஆண்டில் 59 பயனாளிகளுக்கு ரூ.169.35 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. மானியத்துடன் கடன் பெற்ற புதிய தொழில் முனைவோர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

மாவட்ட தொழில் மையத்தின் சார்பில், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் மூலம் மானியத்துடன் கூடிய கடன் பெற்று பயனடைந்த திருமதி. கிருஷ்ணவேணி அவர்கள் கூறுகையில்:-



எனது பெயர் கிருஷ்ணவேணி. நான் நீலகிரி மாவட்டம் குன்னூர் வட்டம் கேத்தி சாந்தூர் பகுதியில் வசித்து வருகிறேன். நான் தனியார் துறையில்; வேலை புரிந்து வந்தேன். சொந்தமாக தொழில் துவங்கும் முயற்சியால் மாவட்ட தொழில் மையத்தை தொடர்பு கொண்டேன். அப்போது அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் குறித்து தெரிவித்தார்கள்.

இத்திட்டம் குறித்து தெரிந்து கொண்டு நான் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விண்ணப்பம் அளித்தேன். அதன் மூலம் புதிதாக மருத்துவ ஆய்வகம் துவங்குவதற்கு ரூ.3.27 இலட்சம் மானியத் தொகையுடன் ரூ.10.55 இலட்சம் கடன் உதவி பெற்று மருத்துவ ஆய்வகத்தினை சிறப்பாக நடத்தி வருகிறேன். மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரம் மேம்பாடு அடைய இது போன்ற பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

**தொகுப்பு**
**சு.பாலாஜி**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**நீலகிரி மாவட்டம்.**

## ‘ஜனநாயகன்’ திரைப்படம் இணையத்தில் வெளியான விவகாரம்: எடிட்டர் மீதான குண்டர் சட்டம் ரத்து

சென்னை, செப்.24-

முதல்வர் விஜய் நடித்த ‘ஜனநாயகன்’ திரைப்படம் இணையத்தில் வெளியான விவகாரத்தில் கைது செய்யப்பட்ட ஃப்ரீலான்ஸ் எடிட்டர் உமாசங்கர் மீதான குண்டர் சட்டத் தடுப்புக் காவல் உத்தரவை சென்னை உயர் நீதிமன்றம் ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது.பயணச் சீட்டுகளை முன்பதிவு செய்யுங்கள்




முதல்வர் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள ‘ஜனநாயகன்’ திரைப்படம், தணிக்கை குழுவின் மறு ஆய்வுக் குழுவின் பரிசீலனையில் இருந்தபோது இணையத்தில் வெளியானதாகக் கூறப்படுகிறது. இந்த விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், படத்தின் தயாரிப்பு நிறுவனமான கேவிஎன் புரொடக்ஷன்ஸ் அளித்த புகாரின் அடிப்படையில் காவல்துறை வழக்குப்பதிவு செய்தது.

இந்த வழக்கில், திருவேற்காட்டைச் சேர்ந்த ஃப்ரீலான்ஸ் எடிட்டரான உமாசங்கர் கைது செய்யப்பட்டார். திரைப்படத்தை இணையத்தில் வெளியிட்டதாக அவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இதையடுத்து, உமாசங்கரை குண்டர் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் சிறையில் அடைக்க சென்னை மாநகர காவல் ஆணையர் கடந்த ஜூலை 30ஆம் தேதி உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்த உத்தரவை எதிர்த்து உமாசங்கரின் சகோதரி ரேணுகாதேவி, சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்தார். அந்த மனுவில், தனது சகோதரர் துணிக்கடையில் மேலாளராகப் பணியாற்றி வருவதாகவும், அவர் சினிமா எடிட்டர் இல்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

மேலும், முழுமையான மனதைச் செலுத்தாமல், இயந்திரத்தனமாக காவல் ஆணையர் தடுப்புக் காவல் உத்தரவைப் பிறப்பித்துள்ளதாகவும், எனவே உமாசங்கர் மீதான குண்டர் சட்டத் தடுப்புக் காவல் உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் சதீஷ்குமார் மற்றும் ராஜா ஆகியோர் அடங்கிய அமர்வு, உமாசங்கர் மீதான குண்டர் சட்டத் தடுப்புக் காவல் உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டது.

## நாட்றம்பள்ளி சுற்றுவட்டார பகுதிகளில் உங்களைத் தேடி உங்கள் ஊரின் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் ஆய்வு

நாட்றம்பள்ளி : செப்.24-

திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி தாலுகாவில் செப் 23 அன்று காலை 9 மணி முதல் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் வே. ல்லசிவன் கே.பந்தாரப்பள்ளி ஊராட்சி மன்ற அலுவலகத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்து ஒகேனக்கல் குடிநீர் திட்ட பணிகள் விநியோகம் குறித்தும் பொது மக்களின் வீடுகளில் இருந்து குப்பைகள் தரம் பிரித்து வாங்குவது குறித்தும், ஊராட்சி நிர்வாகத்தின் சார்பில் தூய்மைப் பணிகள் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்வது குறித்தும் தெரு விளக்குகள் மற்றும் அடிப்படை வசதிகள் வீட்டுமனை இருந்தும் இது நாள் வரை சொந்த வீடு இல்லாத நபர்களின் விவரங்களை சரியான முறையில் பதிவேற்றம் செய்து வெற்றி வீடு வழங்கும் திட்டத்தின்



கீழ் அவர்களுக்கு வீடு பெற்று தர வழிவகை செய்ய வேண்டும் என்றும் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இதனைத் தொடர்ந்து கே .பந்தாரபள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி கூடுதல் வகுப்பறை பழுது பார்த்தல் பணி நிறைவடைந்து உள்ளதையும் ஆய்வு செய்து அரசு கட்டிடங்களின் மீது மழைக்காலத்தில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அங்கன்வாடி மையத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்து அங்கன்வாடி குழந்தைகளின் கற்றல் திறன் மற்றும் குழந்தைகளுக்கு உணவு தயாரிக்க பயன்படுத்தும் பொருட்களின் தரம் மற்றும் இருப்பு விவரம் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு செய்தார். தொடர்ந்து கே.பந்தாரபள்ளி குடியிருப்பு பகுதிகளில் குடியிருப்பு பகுதிகளுக்கு நேரில் சென்று வீடுகளை தூய்மையாகவும் குடி தண்ணீர் மற்றும் கேன்களில் வைக்கப்பட்டுள்ள குடிநீரில் லார்வா புழுக்கள் உள்ளதா என்பதையும் மாவட்ட சுகாதார அலுவலர் தலைமையிலான குழுவினருடன் ஆய்வு செய்து பொதுமக்கள் வீட்டில் உபயோகப்படுத்தும் தண்ணீரை மூடி வைக்க வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் நல்ல தண்ணீரில் புழுக்கள் உற்பத்தியாகி டெங்கு நோய் பரவ வாய்ப்புள்ளதாகவும் குடிநீரை பாதுகாப்பான முறையில் மூடி வைக்க வேண்டும் என பொதுமக்களுக்கு தெரிவித்தார் தொடர்ந்து அரசு துணை சுகாதார நிலையத்திற்கு நேரில் சென்று அங்கு வரும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் மற்றும் பரிசோதனைகள் குறித்து பணியாளர்களிடம் கேட்டு அறிந்து துணை சுகாதார நிலையத்திற்கு வருகை தரும் நோயாளிகளுக்கு உயர்தர சிகிச்சை வழங்க மருத்துவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

## கடும் வறட்சியால் மகசூல் பாதிப்பு பசுந்தேயிலை வரத்து பல மடங்கு குறைந்தது : தொழிற்சாலைகளில் உற்பத்தி சரிவு

மஞ்சூர், செப்.24-

மஞ்சூர் சுற்றுபுற பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் தேயிலை மகசூல் பாதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து தொழிற்சாலைகளில் தேயிலைத்தூள் உற்பத்தி பெருமளவு குறைந்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயம் முக்கியத்தொழிலாக உள்ளது. இதை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் 16கூட்டுறவு ஆலைகள் இயங்கி வருகிறது.

குறிப்பாக குந்தா பகுதியில் மஞ்சூர், பிக்கட்டி, கிண்ணக்கொரை, குந்தா(எடக்காடு), கைகாட்டி, மகாலிங்கா, இத்தலார், மேற்குநாடு, நஞ்சநாடு ஆகிய 8கூட்டுறவு ஆலைகளும் ஏராளமான தனியார் தொழிற்சாலைகளும் உள்ளது. இதில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் மட்டும் சுமார் 15ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் உறுப்பினர்களாக சேர்ந்து தங்களது தோட்டங்களில் பறிக்கப்படும் பசுந்தேயிலையை தொழிற்சாலைகளுக்கு விநியோகித்து வருகின்றனர்.

இந்நிலையில் நடப்பாண்டு துவக்கத்தில் இருதே போதிய மழை பெய்யவில்லை மேலும் கடந்த ஜூன் மாதத்தில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தென்மேற்கு பருவமழை அடியோடு பெய்யாமல் ஏமாற்றத்தை கொடுத்தது. இந்நிலையில் பருவ மழையை எதிர்பார்த்து விவசாயிகள் பலரும் தங்களது தேயிலை தோட்டங்களில் உரமிடுதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொண்டனர். ஆனால் மழை பெய்யாமல் போனதால் தேயிலை தோட்டங்களில் செடிகள் வெந்து போனது.

மேலும் எல் நினோ தாக்கத்தின் காரணமாக பகல் நேர வெயிலின் தாக்கம் பெருமளவு அதிகரித்துள்ளது. இதனால் மஞ்சூர் சுற்றுபுற பகுதிகளில் தேயிலை மகசூல் கடுமையாக பாதித்துள்ளது. தேயிலை மகசூல் பாதிக்கப்பட்டதால் கூட்டுறவு மற்றும் தனியார் தொழிற்சாலைகளுக்கு பசுந்தேயிலை வரத்து அடியோடு குறைந்து போயுள்ளது.

சமீப நாட்களுக்கு முன்பு வரை தொழிற்சாலைகளுக்கு தினசரி பசுந்தேயிலை வரத்து 15ஆயிரம் கிலோ வரை காணப்பட்ட நிலையில் தற்போது நாளொன்றுக்கு 10 ஆயிரம் கிலோவிற்கும் குறைவாகவே பசுந்தேயிலை வரத்து உள்ளது. மஞ்சூர் பகுதியில் உள்ள தொழிற்சாலைகளில் கடந்த சில தினங்களாக நாளொன்றுக்கு 8ஆயிரம் கிலோவிற்கும் குறைவாகவே பசுந்தேயிலை வரத்து உள்ளதாக தொழிற்சாலைகள் தரப்பில் கூறப்படுகிறது.

இந்நிலையில் பசுந்தேயிலை வரத்து குறைந்துள்ளதால் தொழிற்சாலைகளில் தேயிலைத்தூள் உற்பத்தியும் பெருமளவு குறைந்துள்ளது. ஒருசில தொழிற்சாலைகளில் ஒருநாள் விட்டு ஒருநாள் இடைவெளியில் தேயிலைத்தூள் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இதனால் நிரந்தர தொழிலாளர்களுக்கு மட்டுமே வேலை வாய்ப்பு வழங்கப்படும் நிலையில் தற்காலிக தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க முடியாத நிலையில் அவர்களுக்கு தற்காலிக விடுப்பு வழங்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. மஞ்சூர் சுற்றுபுற பகுதிகளில் நாளுக்குநாள் வறட்சியின் தாக்கம் அதிகரித்து வருவது விவசாயிகள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கடலூரில் மாநகராட்சி ஆணையரை கண்டித்து திமுக கவுன்சிலர்கள் முற்றுகை போராட்டம்

கடலூர். செப்.24-

கடலூர் மாநகராட்சியில் சுமார் 45 வார்டுகளில் மழைநீர் வாய்க்கால்களில் தூர் வாரும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர். அந்த தூர்வாரும் பணி முறையாக நடக்கவில்லை என புகார் தெரிவித்து கடலூர் மாநகராட்சி திமுக கவுன்சிலர்கள் மேயர் சுந்தரிராஜா தலைமையில் கடலூர் மாநகராட்சி ஆணையரிடம் புகார் தெரிவிக்க சென்றனர்.

இந்நிலையில் மாநகராட்சி ஆணையர் முறையாக பதில் அளிக்காமல் தரக்குறைவாக பேசியதாக கூறப்படுகிறது மேலும் கடலூர் மாநகராட்சி மேயரையும் மரியாதை குறைவாக நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடலூர் மாநகராட்சி திமுக கவுன்சிலர்கள் தற்போது மாநகராட்சி அலுவலகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் கடலூர் மாநகராட்சி நுழைவாயில் முன்பு கடலூர் உட்கோட்ட டிஎஸ்பி தமிழ் இனியன் தலைமையில் 100 க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## தாம்பரம் மாநகராட்சி சுகாதார துறை அலுவலர் பூபேஸ் பேசிய வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

தாம்பரம் செப்.24-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்கு உடபட்ட 50வது வார்டு ரங்கநாதபுரம் ஏழாவது தெருவில் அரசு நகர்புற பல்துறை ஆரம்ப சுகாதார துறை நிலையம் மற்றும் இலவச டயலிஸ் மருத்துவமும் செயல்பட்டு வருகிறது,

இந்த மருத்துவமனைக்கு தாம்பரம் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து தினமும் ஏராளமானோர் உள்னோயாளிகாவும் ,வெளி நோயாளியாகவும் சிகச்சை பெற்று பெற்று வருகின்றனர்,

முக்கியமாக இந்த மருத்துவமனையில் இலவச டயாலிசிஸ் செய்யபட்டு வருவதால் அதிகளவில் ஏழை எளிய நோயாளிகள் இந்த மருத்துவமனை க்கு வரும் போது மருத்துவர்கள்




இல்லாமல் செவிலியர்கள் மட்டும் சிக்கிசை அளித்து வருவதாகவும் இதனால் நான்கு நோயாளிகள் மேல் சிக்கிச்சைக்காக வேறு மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்துள்ளனர்,

இதனை அறிந்து மருத்துவமனைக்கு வந்த மாமன்ற உறுப்பினர் யாக்குப் அங்குள்ள செவிலியர்களிடம் கேள்வி எழுப்பியும் எந்த வித பதிலும் அளிக்காததால் ,கேள்வி பட்டு வந்த தாம்பரம் மாநகராட்சி சுகாதார துறை அலுவலர் பூபேஸ் பேசிய போது போதிய மருத்துவர்கள் இல்லாததே இந்த நிலைக்கு காரணம், என்றும் இது போன்று தாம்பரம் மாநகராட்சியில் செயல்படும் 13 மையங்களில் மருத்துவர்கள் குறைபாடு இருந்து வருகிறது,

என்னால் மருத்துவர்களை நியமிக்கமுடியும் என்றால் நியமித்துவிடுவேன்,ஆனால் இது குறித்து தமிழக அரசிடம் வாரம் இருமுறை மருத்துவர்கள், செவிலியர்கள் தேவை என்று மனு அனுப்பி உள்ளதாகவும்,ஆனால் இதுவரை எந்த ஒரு மறு பதிலும் அரசாங்கத்திடமிருந்து வரவில்லை என்றும்,மருத்துவர்கள் ,செவிலியர்கள் நியமிப்பதற்கு காலி இடங்கள் உள்ளதால் அதற்கான இடங்கள் நிறப்பட்டால் போதும் என்று தாம்பரம் மாநகராட்சி சுகாதார துறை அலுவலர் பூபேஸ் பேசிய வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



# தாராபுரம் இடைத்தேர்தல்: வாக்குப்பதிவு இயந்திரங்கள் சரிபார்ப்பு

திருப்பூர்: செப்.24-

தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு, திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள வாக்குப்பதிவு இயந்திரக் கிடங்கில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தொடர்பான சரிபார்ப்பு மற்றும் தேர்தல் முன்னேற்பாட்டுப் பணிகள் நடைபெற்றன.

மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான டாக்டர் மனிஷ் நாரணவரே தலைமையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) கண்ணன் உள்ளிட்ட தேர்தல் பிரிவு அலுவலர்கள் உடனிருந்தனர்.

தாராபுரம் இடைத்தேர்தலில் பயன்படுத்தப்படவுள்ள, முதல் நிலை பரிசோதனையில் தேர்ச்சி பெற்ற EVM மற்றும் VVPAT கருவிகளை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் சமவாய்ப்பு முறையில் ஒதுக்க தேர்தல் ஆணையம் உத்தரவிட்டிருந்தது. திருப்பூர் மாவட்டத்தின் அதிகாரப்பூர்வ தேர்தல் பக்கத்திலும் தாராபுரம் இடைத்தேர்தலுக்கான EVMVVPAT பணிகள் இடம்பெற்றுள்ளன.

தாராபுரம் தொகுதியில் அக்டோபர் 6-ஆம் தேதி வாக்குப்பதிவும், அக்டோபர் 9-ஆம் தேதி வாக்கு எண்ணிக்கையும் நடைபெறுகிறது.



# வீரபாண்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் காலை உணவுத் திட்டம் மாவட்ட ஆட்சியர் மாணவர்களுடன் உணவு அருந்தினார்

திருப்பூர். செப்.24-

திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட வீரபாண்டி அரசு மேல்நிலைப்பள்ளியில், பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தின் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்ட காலை உணவின் தரம் மற்றும் திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட்ட அவர், மாணவ, மாணவிகளுடன் அமர்ந்து காலை உணவு அருந்தினார். ஆய்வின்போது திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி. அமித் உள்ளிட்ட அதிகாரிகள் உடனிருந்தனர்.



# வீரபாண்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் காலை உணவுத் திட்டம் மாவட்ட ஆட்சியர் ஆய்வு

திருப்பூர், செப்.24-

திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட வீரபாண்டி அரசு மேல்நிலைப்பள்ளியில், பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தின் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது, திட்டத்தின் கீழ் மாணவ, மாணவிகளுக்கு காலை உணவு வழங்கப்படும் நடைமுறைகள் மற்றும் ஏற்பாடுகளை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார். அப்போது திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி. அமித் உடனிருந்தார்

# ஊட்டி ரோஜா பூங்காவில் மலர்கள் பூக்காததால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம்

ஊட்டி. செப்.24-

இரண்டாம் சீசன் துவங்கிய நிலையில், ஊட்டி ரோஜா பூங்காவில் போதிய மலர்கள் இல்லாததால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டத்திற்கு நாள் தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர். இருந்த போதிலும், முதல் சீசனான ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் பல லட்சம் சுற்றுலா பயணிகள் வருவார்கள்.

இதற்கு அடுத்தப்படியாக இரண்டாவது சீசனான செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் அதிகளவு சுற்றுலா பயணிகள் வருவார்கள். பொதுவாக இரண்டாம் சீசன் போது, வட மாநிலங்களை சேர்ந்த சுற்றுலா பயணிகள் அதிகம் வருவார்கள். இச்சமயங்களில் ஊட்டி வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் பொருட்டு தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா ஆகியவைகள் மேம்படுத்தப்படும்.Time & Calendars

தாவரவில் பூங்காவில் மலர் கண்காட்சி நடத்தாவிட்டாலும், அதற்கு இணையாக மலர் அலங்காரங்கள் மேற்கொள்ளப்படும். பூங்கா முழுவதிலும் மலர்கள் பூத்துக் காணப்படும். இதனை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்வார்கள்.

அதேபோல், ரோஜா பூங்காவில் உள்ள அனைத்து செடிகளிலும் மலர்கள் பூத்து குலுங்கும் வகையில் தயார் செய்யப்படும். இதனை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்வார்கள். ஆனால், இம்முறை எல்நினோ பாதிப்பு காரணாக நீலகிரியில் மழை பொய்த்த நிலையில், போதிய தண்ணீர் இல்லாமல், ரோஜா பூங்காவில் உள்ள பெரும்பாலான செடிகளில் இம்முறை மலர்கள் அதிகம் பூக்காமல் உள்ளது.

ஒரு சில செடிகளில் மட்டுமே மலர்கள் பூத்துள்ளன. எனினும், எதிர்பார்த்த அளவிற்கு மலர்கள் பூங்காவில் காணப்படவில்லை. தற்போது இரண்டாம் சீசன் துவங்கி நடந்து வரும் நிலையில், வெளி மாநில சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்துள்ளது.

இவர்கள், ஊட்டியில் உள்ள தாவரவியல் பூங்கா மற்றும் ரோஜா பூங்காவிற்கு செல்கின்றனர். ஆனால், ரோஜா பூங்காவில் போதிய மலர்கள் இல்லாத நிலியல், பூங்காவிற்கு வரும் சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.



# திருப்புவனம் காளியம்மன் கோவில் முளைப்பாரி திருவிழா: எம்.எல்.ஏ. இளங்கோவன் பங்கேற்பு

சிவகங்கை. செப்.24-

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் புதூர் கிழக்குத் தெருவில் உள்ள ஸ்ரீ அருள்மிகு காளியம்மன் கோவில் முளைப்பாரி திருவிழா நடைபெற்றது.



விழாவில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் இளங்கோவன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்.

அவருக்கு அப்பகுதியைச் சேர்ந்த தமிழக வெற்றிக் கழக சிவகங்கை தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணியின் இணை அமைப்பாளர் கரு.சங்கர், பரிவட்டம் கட்டி ,நினைவுப் பரிசாக வீரவேல் வழங்கி வரவேற்றார்.

திருவிழாவில் கோவில் நிர்வாகிகள், கட்சி நிர்வாகிகள் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# விழுப்புரத்தில் நாளை 5 மணி நேரம் மின்தடை

விழுப்புரம் செப்.24-

விழுப்புரம் 110/22 KV துணை மின் நிலையத்திற்குட்பட்ட பகுதிகளில் மாதாந்திர பராமரிப்புப் பணிகள் நடைபெறுவதால், இன்று (24.09.2026, வியாழக்கிழமை) காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை மின் விநியோகம் நிறுத்தப்படும் என தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் அறிவித்துள்ளது.

மின்தடை ஏற்படும் பகுதிகள்: விழுப்புரம், சென்னை நெடுஞ்சாலை, திருச்சி நெடுஞ்சாலை, செஞ்சி ரோடு, மாம்பழப்பட்டு ரோடு, வண்டிமேடு, வடக்கு தெரு, விராட்டிக்குப்பம், கே.வி.ஆர். நகர், மகாராஜபுரம், பாப்பான்குளம், திருவாமாத்தூர், ஓம் சக்தி நகர், மருதூர், கப்பூர், பிடாகம், மின்வாரிய குடியிருப்பு, பொய்யப்பாக்கம், நாராயணன் நகர், ஆசாகுளம், கீழ்பெரும்பாக்கம், பாகரப்பட்டை, திருநகர், கம்பர் நகர், தேவநாதசுவாமி நகர், மாதிரிமங்கலம், பனாம்பட்டு, கண்டமானடி பிரிவு, வி.அகரம், ஜானகிபுரம், வழுதரெட்டி, சாலை அகரம், கொடம்பத்தூர், கோலியனூர், கோலியனூர் கூட்டுரோடு, கீழக்கு பாண்டி ரோடு, மகாராஜபுரம் உள்ளிட்ட பகுதிகள்.

பராமரிப்புப் பணிகள் திட்டமிட்ட நேரத்திற்கு முன்பாக முடிவடைந்தால், மின் விநியோகம் முன்னதாகவே வழங்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



■ மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு வட்டம், மாங்குளம் கிராமத்தில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., தலைமையில் மக்கள் தொடர்பு முகாமில் 172 பயனாளிகளுக்கு ரூ.41.43 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.



# மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் அடிப்படை வசதிகள் குறித்து ஆணையாளர் ஆய்வு

மதுரை, செப்.24-

மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அடிப்படை வசதிகள், தூய்மை மற்றும் சீரமைப்பு பணிகளை மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.பேருந்து நிலைய வளாகத்தில் பழுதடைந்திருந்த சுத்தி கரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் இயந்திரத்தை பார்வையிட்ட ஆணையாளர், பழுதுகளை உடனடியாக சரிசெய்யவும், இயந்திரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளை தூய்மையாக பராமரிக்கவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும், நடை பாதைகளில் சேதமடைந்த தரைத்தளங்களை சீரமைக்கவும், தாய்மார்கள் பாலூட்டும் அறை மற்றும் கழிப்பறைகளில் முறையாக தூய்மைப் பணிகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தினார்.



ரூ.15.50 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பேருந்து நிலைய மேற்கூரை மறுசீரமைப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகளையும் ஆணையாளர் ஆய்வு செய்தார்.

முன்னதாக, மாட்டுத்தாவணி ஆம்னி பேருந்து நிறுத்துமிட பொது கழிப்பறையில் நடைபெற்று வரும் மராமத்து பணிகளை பார்வையிட்டு, பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர அறிவுறுத்தினார்.

மேலும், இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் பயன்பாடின்றி உள்ள கழிப்பறையை மராமத்து செய்து பயன்பாட்டுக்கு கொண்டு வரவும், சுற்றுப்புறத்தை தூய்மையாக பராமரிக்கவும் உத்தரவிட்டார்.

ஆய்வின்போது உதவி செயற்பொறியாளர் ஆரோக்கிய சேவியர், நகர்நல அலுவலர் டாக்டர் ஆனந்தஜோதி, சுகாதார அலுவலர் ராஜ்கண்ணன் உள்ளிட்ட மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

# கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் பருவமழைக்கால நோய் தடுப்பு மற்றும் தூய்மைப் பணிகள் முகாம்

கிருஷ்ணகிரி, செப்.24-

கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக் கல்லூரி வளாகத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாபெரும் பருவமழைக்கால நோய் தடுப்பு மற்றும் தூய்மைப் பணிகள் முகாம் நடைபெற்றது.



முகாமிற்கு மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர் ஜெகநாதன் தலைமை வகித்தார். வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் இனியள் மண்டோதரி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு. சரவணன், திருமதி. செல்லக்கண்ணாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அரசு மகளிர் கலைக் கல்லூரி முதல்வர் திருமதி சாந்தி (பொ) தலைமையில் பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் முகாமில் கலந்து கொண்டனர்.

முகாமில் பருவமழைக் காலங்களில் ஏற்படக்கூடிய டெங்கு, சிக்குன்குனியா, மலேரியா உள்ளிட்ட கொசுக்களால் பரவும் நோய்கள் குறித்து மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்வது, தேவையற்ற நீர்த்தேக்கங்களை அகற்றுவது, கொசுப்புழுக்கள் உருவாகாமல் தடுப்பது உள்ளிட்ட தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விளக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கல்லூரி வளாகம் முழுவதும் கொசுப்புழு ஒழிப்புப் பணி, முதிர் கொசு ஒழிப்புப் பணி மற்றும் புகை மருந்து தெளிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், வளாகத்தில் தேங்கியிருந்த கழிவுகள் மற்றும் தேவையற்ற பொருட்கள் அகற்றப்பட்டு, சுற்றுப்புறத்தை தூய்மையாக பராமரிக்கும் வகையில் சிறப்பு தூய்மைப் பணிகள் நடைபெற்றன.

நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் முனைவர் லாவண்யா, முனைவர் கனகலட்சுமி ஆகியோர் தலைமையில் மாணவிகள் தூய்மைப் பணிகளில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு வளாகத்தை தூய்மைப்படுத்தினர்.

மேலும், வட்டார சுகாதார மேற்பார்வையாளர், சுகாதார ஆய்வாளர்கள், ஊராட்சி செயலாளர் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்டோர் முகாமில் பங்கேற்று, கொசு ஒழிப்பு மற்றும் சுற்றுப்புறத் தூய்மைப் பணிகளை ஒருங்கிணைத்து சிறப்பாக மேற்கொண்டனர்.

பருவமழைக் காலத்தில் தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்கும் வகையில், பொதுமக்கள் தங்கள் வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொண்டு, சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களை முறையாக பின்பற்ற வேண்டும் என அதிகாரிகள் அறிவுறுத்தினர்.

**மாண்புமிகு குடும்பநல நீதிமன்றம், மதுரை**
**M.C.No.39/2026**

S. ஜஸ்வர்யா
த/பெ. சேகர்,
கதவு எண்: 5, கண்ணன் காலனி 3-வது தெரு,
சமயநல்லூர், மதுரை.
மனுதாரர்

எதிர்

கார்த்திக்ராஜ்
த/பெ.அரிச்சந்திரன்,
அயப்பநாயக்கன்பட்டி,
வாடிப்பட்டி தாலுகா,
மதுரை மாவட்டம் 625207.
1-ம் பிரதிவாதி

அறிவிப்பு

மேற்படி வழக்கில், மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரரிடமிருந்து ஜீவனாம்சம் பெறக் கோரி, மதுரை மாண்புமிகு குடும்பநல நீதிமன்றத்தில் M.C.No.39/2026 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில் எதிர்மனுதாரர் ஆஜராகுமாறு பலமுறை நோட்டீஸ் அனுப்பியும், அவர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இதையடுத்து, மேற்கண்ட வழக்கில் 05.10.2026 அன்று வாய்தா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட தேதியில் எதிர்மனுதாரரான தாங்கள் நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ மதுரை குடும்பநல நீதிமன்றத்தில் ஆஜராகி, வழக்கு தொடர்பாக தங்களது ஆட்சேபனைகள் அல்லது பதிலைத் தெரிவிக்க வேண்டும். தவறினால், தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படலாம் என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

K. நிரஞ்சபிரபு, B.C.A., LL.B.,
வழக்கறிஞர்
எண்: 44, 34A, நேதாஜி நகர்,
ஒத்தக்கடை மெயின் ரோடு,
கடச்சனேந்தல்,
மதுரை 625107.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161